**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 28/2021**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | கணபதி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | சாத்தையா | **தொழில்:** | விவசாயம் |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது:** | 50/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

09.05.2025
**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை:**

நான் இம்மனுவில் மனுதாரராவேன். நான் எதிரி மீது மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் 6** வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) 06.01.2021 ஆம் தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி கொடுத்த KVB வங்கி, அறந்தாங்கி கிளை காசோலை அசல் (காசோலை எண்.000305) **ம.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) 07.01.2021 ஆம் தேதிய TMB வங்கி கொடுத்த மெமோ அசல் **ம.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3) 12.01.2021 ஆம் தேதிய புகார்தாரர் வழக்கறிஞர் எதிரிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் அலுவலக நகல் **ம.சா.ஆ–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4) 13.01.2021 ஆம் தேதிய எதிரி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5) 01.02.2021 ஆம் தேதிய புகார்தாரர் வழக்கறிஞர் எதிரியின் முகவரிக்கு அனுப்பிய Rejoinder அறிவிப்பு அலுவலக நகல் அசல் அஞ்சலக ரசீதுடன் **ம.சா.ஆ–5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6) 03.02.2021 ஆம் தேதியில் எதிரி Rejoinder அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

**எதிரிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**